செய்தி வெளியீடு எண் : 1432 நாள் : 27.12.2021

## செய்தி வெளியீடு

**கலை பண்பாட்டுத்துறை**
**நம்ம ஊரு திருவிழா**
**(14.01.2022, 15.01.2022, 16.01.2022)**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை தலைமைச் செயலகத்தில் 1.7.2021 அன்று நடத்தப்பட்ட கலை பண்பாட்டுத்துறை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கிராமியக் கலைஞர்களைக் கொண்டு சென்னையில் பிரம்மாண்டமான கலைவிழா நடத்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 04.09.2021 அன்று 2021–2022 ஆம் ஆண்டு துறை மானியக் கோரிக்கை எண்.29–ல் மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சி மொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.தங்கம்தென்னரசு அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**"தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையினையொட்டி, தமிழகத்தினைச் சார்ந்த பாரம்பரியக் கலைகளின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில், திரளான கலைஞர்கள் பங்கு பெறும் பிரம்மாண்ட கலைவிழா, பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடன் ஆண்டுதோறும் சென்னையில் மூன்று நாட்கள் நடத்தப்படும். இதற்கென தொடரும் செலவினமாக கலை பண்பாட்டுத்துறையின் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து ரூ.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்"**

மேற்காண் சட்ட மன்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசாணை(நிலை) எண். 166, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்

துறை, நாள். 18.11.2021 வாயிலாக தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையினையொட்டி தமிழகத்தினைச் சார்ந்த பாரம்பரியக் கலைஞர்கள் பங்குபெறும் பிரம்மாண்ட கலைவிழா, ஆண்டு தோறும் சென்னையில் 6 இடங்களில் (இணைய வழி மூலமும்) 3 நாட்கள் நடத்துவதற்கு ரூ.91,00,000/- தொடரும் செலவினமாக அரசு அனுமதித்து ஆணை வெளியிட்டுள்ளது.

அரசாணையினை செயல்படுத்தும் வகையில் **"நம்ம ஊரு திருவிழா"** எனும் தலைப்பில் தமிழகத்தின் பாரம்பரியமான கிராமியக் கலைகளை வெளிப்படுத்தும் 500-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு, சென்னையில் 7 இடங்களில் 14.01.2022, 15.01.2022, 16.01.2022 ஆகிய மூன்று நாட்கள் கலை விழா நடைபெறவுள்ளது. அதுமட்டுமல்லாமல் 7 வெளி மாநில கிராமியக் கலைக்குழுவினர் இவ்விழாவில் பங்குகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**"நம்ம ஊரு திருவிழாவை"** சீரும், சிறப்புமாக நடத்வது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம்தென்னரசு அவர்களின் தலைமையில் நடைபெற்ற முதற்கட்ட ஆலோசனைக் கூட்டத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திர மோகன், இ.ஆ.ப., கலை பண்பாட்டுத்துறை ஆணையர்(மு.கூ.பொ) திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் தலைவர் கலைமாமணி வாகை சந்திரசேகர்

தலைமையிலான ஒருங்கிணைப்புக்குழுவின் உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர், காவல்துறை துணை ஆணையர், போக்குவரத்துத்துறை துணை ஆணையர், நேரு விளையாட்டரங்கத்தின் முதுநிலை மேலாளர், அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் துணை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சென்னையில் நடத்தப்படுவதைப் போன்றே இவ்விழாவினை மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் கலைஞர்கள் பயன்பெறும் வகையில் நடத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும், அரசு உயர் அலுவலர்களாலும், கலைஞர்களாலும் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை விரைந்து எடுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**